விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இத்துறையின்கீழ் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியரின் நலன் கருதி ஒரு கேரம்போர்டு, இரண்டு சதுரங்கப் பலகை, இரண்டு கைப்பந்துகள், ஒரு கைப்பந்து வலை, கைப்பந்துக்குரிய ஒரு ஜோடி இரும்புக் கம்பம், இரு ஜோடி டெனிக்காயிட் மற்றும் ஒரு டெனிக்காயிட் வலை ஆகியவை வழங்கப்பட்டு வரும் நிலையில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.* (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

அஞ்சல் துறை போட்டித் தேர்வுகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படாது என்று மத்திய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கண் திறந்து வைத்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த தினம் இன்று. அவருடைய நினைவைப் போற்றி, அவருடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்த எங்கள் ஆருயிர் தலைவர், கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து,* (மேசையைத் தட்டும் ஒலி) *ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து நான் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தபால் துறையின் போட்டித் தேர்வுகள் இனி தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில்

நடத்தப்படாது என்று தலைமை அஞ்சல் நிலையங்களுக்கு மத்திய அரசு ஒரு சுற்றறிக்கையினை அனுப்பியிருக்கிறது. தமிழகத்தில் அதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பு உண்டாகி, எங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட அதைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தார்கள். ஆனால், தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி, தபால் துறை இன்றைக்கு அந்தத் தேர்வை நடத்தியிருக்கிறது. இந்தத் தேர்வுகள் ஆங்கிலம் அல்லது இந்தி அல்லது அந்தந்த மாநில மொழிகளில் நடத்தப்படலாம் என்பதுதான் இதுவரை விதியாக இருந்தது. கடந்த மே மாதம் 16 ஆம் தேதி, இந்தத் தேர்வுகளுக்குரிய விதிகள் உருவாக்கப்பட்டபோதுகூட, அஞ்சல் துறையிலிருந்து இதே விதியினைக் கொடுத்திருந்தார்கள். ஆனால், பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, கடந்த ஜூலை 11–ம் தேதி, இந்த விதியை மாற்றி, தமிழகம் உள்ளிட்ட எந்த மாநிலத்திலும், அந்தந்த மாநில மொழிகளில் தேர்வு எழுத முடியாது; இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ மட்டும்தான் எழுத முடியும் என்று அந்த விதியில் திருத்தம் செய்திருப்பது, தமிழகம் உள்ளிட்ட தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் யாரும் இனி அஞ்சல் துறைப் பணிகளில் வரக் கூடாது என்ற வகையில், திட்டமிட்டு தடுக்கக்கூடிய ஒரு நிகழ்வாகவே நாங்கள் கருதுகிறோம். மத்திய அரசுத் துறைகளில் தமிழ் இளைஞர்களுக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்பைத் தட்டிப் பறிக்கக்கூடிய செயலாகவும், தமிழக இளைஞர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கக்கூடிய செயலாகவும் இது இருக்கும். ஏற்கெனவே இதற்காக 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்வுகளில்கூட, பீஹார், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் வட மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் அதிகமாக வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றும், அதில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும் சொல்லி தற்போது அது விசாரணையில் இருக்கிறது. எனவே, மாநிலங்களை மதித்து, இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்கும் உன்னதப் பாதையிலிருந்து மத்திய அரசு விலகிச் செல்வது வேதனையளிக்கிறது. ஏற்கெனவே, மஞ்சுஸ்ரீ மற்றும் ஆந்திர அரசு இடையிலான ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு தேர்விற்கான தகுதி வரம்புகளை அந்தத் தேர்விற்கான பணிகள் துவங்கிவிட்டபோது அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அதிகார அமைப்புகள் அதனை மாற்ற முடியாது என்று ஓர் உத்தரவை வழங்கியிருக்கிறது. இதைத் தெரிந்துகொண்டே பா.ஜ.க. அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு, இன்றைக்கு இந்த விதிகளில் மாற்றம் செய்திருப்பது, தமிழ்நாட்டிற்கு அவர்கள் செய்திருக்கக்கூடிய

2019 ஜூலை 15] [திரு. தங்கம் தென்னரசு]

ஓரவஞ்சனையாகவே நாங்கள் பார்க்கிறோம். ஆகவே, தபால் துறைத் தேர்வுகள், தமிழில் நடத்தப்பட வேண்டும் என்பதை மாநில அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும். தமிழக இளைஞர்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் கிடைக்கும் வேலைவாய்ப்புகளுக்கான தடைகளை உருவாக்குவது குறித்து இந்தப் பேரவையில் ஒரு சிறப்பு விவாதம் நடத்தி, தமிழ் இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பாதுகாக்கக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கான முயற்சிகளை எந்தவகையில் இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தபால் துறையால் கிராமிய தபால் துறைப் பணியிடங்களுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டன. தமிழகத்தில் தபால் துறைத் தேர்வுகள் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய 4 இடங்களில் நடத்தப்பட்டன. மத்திய அரசால் நடத்தப்பட்ட அந்தத் தேர்வினில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.* Paper–I–ஐ *பார்க்கும்போது,* Multiple choice questions–*க்கு 100 மதிப்பெண்கள்; அகில இந்திய ரீதியில்,* Multiple choice questions *என்பது முன்பு எப்படி இருந்ததென்றால்,* English, Hindi and the regional language *என்ற முறையில் கேள்விகள் இருந்தன. ஆனால், தற்போது எப்படி இருக்கிறதென்றால்,* Hindi and English *என்ற முறையில்தான் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன; தமிழ் இல்லை. அதுவே,* Paper–II–*வில் தமிழ் மற்றும்* English. *தமிழில் 15 சொற்களைக் கொடுத்துவிட்டு, அவற்றை ஆங்கிலத்தில்* translation *செய்ய வேண்டும். அதற்கு 15* marks. *அதேபோல் ஆங்கிலத்தில் 15 சொற்களைக் கொடுத்துவிட்டு அவற்றைத் தமிழில்* translation *செய்ய வேண்டும், அதற்கு 15* marks. *அதேபோன்று, இரண்டு கட்டுரைகள் தமிழில் எழுதுவதற்கு 20* marks. Paper–II–*வைப் பொறுத்தவரை பிரச்சினை இல்லை. அது* already *இருந்ததுபோல் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அந்த* Paper–II–*விற்கு 50* marks.

[திரு. டி. ஜெயக்குமார்] [2019 ஜூலை 15

முற்பகல் 11–20

Paper–I–ஐப் பொறுத்தவரை, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இது அகில இந்திய ரீதியாக எடுக்கப்பட்ட ஒரு முடிவு. எனவே, இந்த முடிவு நிச்சயம் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, இருமொழிக் கொள்கையைப் பின்பற்றும் நம்முடைய அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரை, இந்தித் திணிப்பை எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை. இதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். இது ஒன்று.

இரண்டாவது, மத்திய அரசால் நடத்தப்படுகின்ற எந்தத் தேர்வானாலும் சரி, அந்தந்த மாநில மொழியிலும் கேள்வித் தாள்கள் இடம்பெறுவதற்கு மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் நான் சொல்கின்றேன், மொழிக் கொள்கையைப் பொறுத்தவரை, we are sailing in the same boat. நாம் ஒரே படகில் பயணம் செய்வதால், அங்கே உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை இதற்காகக் குரல் எழுப்பச் சொல்லுங்கள், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அம்மா அவர்களின் அரசினுடைய குரலை நிச்சயமாக எழுப்பி, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் அம்மா அவர்களின் அரசு உறுதியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. தங்கம் தென்னரசு மற்றும் திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் அருமையாக இருந்தது. உங்கள் அரசின் கொள்கையும் திடமாக இருந்தது. நீங்களும் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்கிறீர்கள். ஆனால், paper–I–ல் முதலில் படித்ததைப் பார்த்தீர்கள் என்றால், அதில் regional language இல்லையென்று சொன்னீர்கள். அதற்குத்தான் எங்கள் உறுப்பினர், இந்த அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார். எங்கள்

2019 ஜூலை 15] *[திரு. துரைமுருகன்]*

அரசு இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுகிறது என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசாமல் உட்கார்ந்துவிடக் கூடாது. இந்த அவையில் ஒரு தீர்மானம் போட்டு condemn *செய்ய வேண்டும். உங்களால்* condemn *செய்ய முடியாது. அதனால் இந்தத் தேர்வுகளை தமிழில் நடத்துவதற்கு வற்புறுத்த வேண்டிய நிலையைச் செய்ய வேண்டாமா என்று கேட்கிறார். அதுபோன்ற ஒரு தீர்மானத்தை இந்த அரசால் நிறைவேற்ற முடியுமா என்று கேட்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பது தெளிவாகவே பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.* (குறுக்கீடுகள்) *ஒரு நிமிடம் இருங்கள். நான் சொல்வது என்னவென்றால், நாடாளுமன்றம் என்பது* powerful. *இந்த விஷயத்தில் அழுத்தம் கொடுப்பதில், அரசு* to *அரசு என்பது ஒருவகை. நாடாளுமன்றத்தில் உங்கள் உறுப்பினர்கள் 38 பேர் இருக்கிறீர்கள். நீங்கள் இதுகுறித்து உங்கள் குரலை எழுப்புங்கள். நாடாளுமன்ற மேலவையில் நாங்களும் இருக்கிறோம். அங்கு எங்களுடைய குரலை நிச்சயமாக எழுப்புவோம். நாம் இரண்டு பேரும் சேர்ந்து இதற்காகக் குரல் கொடுப்போம். நம்முடைய உரிமையை நிலைநாட்டுவோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு இந்தப் பிரச்சினை குறித்து குரல் எழுப்ப வேண்டும்,* Well of the House*–க்குப் போக வேண்டும், அதையெல்லாம் செய்வார்கள். அதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. அதன்பிறகு* 'The House is adjourned' *என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால், நம்முடைய அவை இருக்கிறதே, இதுதான் பலமான ஒன்று. அங்கு 38 உறுப்பினர்கள் இருக்கிறோம். இங்கு 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். அதனால் நாம் தீர்மானம் போடுவோம். நம் இரண்டு*

பேரின் கொள்கையும் ஒரே கொள்கை. இந்தப் பிரச்சினை குறித்து ஒரு தீர்மானம் இயற்றுங்கள் என்று சொல்கிறோம். இதில் என்ன தயக்கம்? நாம் எதிர்க்கிறோம் என்பதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறோம். எனவே, ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டியதுதானே! இது ஓர் அடையாளம்தானே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதில் விருப்பம்போல் தெரிகிறது.

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நிகழ்வின் தொடர்ச்சியாக. . .(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்
திரு. டி. செங்குட்டுவன், திரு. ப. ரங்கநாதன் மற்றும்
திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் எழுந்து நின்றனர்)*

ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கான விளக்கம் அரசால் கொடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், இதற்குமேல் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

இதெல்லாம் சரியில்லை, உட்காருங்கள்.

3. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் இலக்கினை எய்திடும் வகையில் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியலில் சில விவரங்களின் மென்பொருள் வடிவம் PDF முறையில் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2018–2019 ஆம்*

ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 9–வது அறிக்கை, பொதுக் கணக்குக் குழுவின் 67 முதல் 90 வரையிலான 24 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் 75 முதல் 91 வரையிலான 19 அறிக்கைகள், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6–வது அறிக்கை, அரசு உறுதிமொழிக் குழுவின் 57 முதல் 76 வரையிலான 18 அறிக்கைகள் மற்றும் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 2–வது அறிக்கை ஆகியவை பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன், அறிக்கைகளின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்படும் என்பதனையும்.. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். நான் படித்துவிடுகிறேன். நான் படிப்பது, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அறிவிப்பினைக்கூட பொறுமையாக நீங்கள் கேட்கவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

அஞ்சல் துறை போட்டித் தேர்வுகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படாது என்று மத்திய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (மணியடிக்கப்பெற்றது)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

முற்பகல் 11–25

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும்

அரசைக் கேட்டார்கள். அரசு சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தெரிவித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். சொல்வதைக் கேளுங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்திக்கொண்டிருக்கும்போது, நீங்கள் உங்களுடைய கோரிக்கைகளை வைக்கலாம். ஆனால், Zero Hour–ல் raise செய்ததற்கு அரசு சார்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். அதற்கு மேலே நான். . .(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதை நீங்கள் வற்புறுத்துவது உங்களுடைய உரிமை. அது வேறு. ஆனால் நான் பேரவைக்கு ஓர் அறிவிப்பு என்று சொல்லி agenda–விற்குள் போய்விட்டேன். அடுத்த subject–க்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பவும் அதையே பேசிக்கொண்டிருந்தால் என்னால் அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. இந்த அறிவிப்பை நான் முடித்துவிடுகிறேன். எது சொல்வதாக இருந்தாலும் பிறகு சொல்லுங்கள்.

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் இலக்கினை எய்திடும் வகையில் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியலில் சில விவரங்களின் மென்பொருள் வடிவம் PDF முறையில் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை ஆகியன பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் அறிக்கைகளின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்திலே வைக்கப்படும் என்பதனையும் அவ்வறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2019 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது முதல் பதினொன்றாவது வரையிலான 1 முதல் 100 வரையிலான வினாக்கள்–விடைகளை